# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No.132/2019

2025 -ம் ஆண்டு ஜூலை மாதம் 17 -ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969 ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு.R. சீனிவாசன், Bench Clerk(Gr-III) அவர்களால் சாட்சியம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 17.07.2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.முத்துக்குமரன் (PW-1) | வயது | : | 50/2025 |
| க/த பெயர் | : | திரு. சிதம்பரம் | தொழில் | : | விவசாயம் |
| முகவரி | | சோழநதி | வட்டம் | | மன்னார்குடி |

இந்நீதிமன்ற மனு எண்.109/2025, 110/2025 நாள்.27.06.2025 மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சியானவர் மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டது.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. தாவா சொத்தின் மூல பத்திரம் பிரதிவாதி வசம் இருப்பதை தெரிந்து கொண்டேன் என்றால் நீதிமன்றம் வந்த பின்பு தெரிந்து கொண்டேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் 25.07.1956 தேதியில் வாதியின் பாட்டியார் அஞ்சுதத்தம்மாள் பெயரில் கிரயம் வாங்கிய அசல் ஆவணம் என்றால் சரிதான். (**25.07.1956 தேதியிட்ட கிரய ஆவணத்தின் அசல் பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

2. தாவா சொத்தை எனது அப்பா எந்த தேதியில் எனக்கு இனாம் செட்டில்மெண்ட் எழுதி கொடுத்தார் என்றால் 11.09.2018 ல் எழுதி கொடுத்தார். அந்த செட்டில்மெண்ட் பத்திரத்தில் தாவா சொத்தானது மூல பத்திரமாக 25.07.1956 தேதியிட்ட கிரய பத்திரம் மூலம் தனக்கு கிடைத்தது என்ற விபரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

3. மூல பத்திரத்தின் நகலினை எனது தரப்பில் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்துள்ளதால் மூல பத்திரம் இருக்கும் விபரத்தை 15.03.2017 ல் தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான்.

4. மூல பத்திரம் இருக்கும் விபரத்தை தெரிந்து கொண்ட அந்த மூல ஆவணத்தை குறித்து எந்த விபரத்தையும் தனது செட்டில்மெண்ட் பத்திரத்தில் சொல்லாமல் முன்னுக்கு பின் முரணாக தாவா சொத்தை பொறுத்து மோசடியாக ஆவணம் ஏற்படுத்திக் கொண்டேன் என்றால் சரியல்ல.

5. வழக்குரையில் மூல ஆவணமானது கஜா புயலில் காணாமல் போய்விட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அப்படி சொல்லியுள்ளது தவறானது என்றால் சரியல்ல. தாவா சொத்தானது வாய்மொழி கிரயத்தின்படியும், தாவா சொத்து மூல பத்திரப்படியும் பிரதிவாதி வசம் வந்துவிட்டது என்ற விபரத்தை மறைத்து பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
Date: 2025.07.17 17:20:00 +0530

District Munsif
Mannargudi.